**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# CP. 25 /2022

**Deposition of PW1**

Name : **ஹரிராமன்** Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 03.03.2023 in accordance with Provisions X of Evidence Act 1872.

குறுக்குவிசாரணை

நான் எப்பொழுது பணியில் சேர்ந்தேன் என்றால் 09.09.1999 ல் பணியில் சேர்ந்தேன். அப்போது நடத்துனராக பணியில் இருந்தேன். தற்போது எனது வயது 47 ஆகும் . என்னை பணி நீக்கம் செய்து உத்தரவிட்ட நாள் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ 3 என்னை பணி நீக்கம் செய்த உத்தரவு என்றால் சரி. நான் 23.05.2012 ஆம் தேதி எந்த விதமான முன்னறிவிப்புமின்றி பணிக்கு செல்லாமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. 09.04.2013 ஆம் தேதியில் பணி நீக்கம் செய்த உத்தரவு நகலை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றும் , அந்த உத்தரவில் நிலுவை தொகை ஏதாவது இருந்தால் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த உத்தரவு கிடைக்கப்பெறவில்லை. மேற்படி உத்தரவை நான் பெற்றுக்கொண்டேன் என்றும் மேற்படி உத்தரவை தற்போது பெற்றுக்கொள்ள வில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 01.11.1999 முதல் 08.05.2012 வரை 26 முறை குற்றம் புரிந்தற்காக எனக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. நான் இந்த கணக்கிட்டு மனுவை 9 ஆண்டுகளுக்கு

பிறகு தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரி. என்னுடைய குடும்ப விசாரணைக்கு நான் ஆஜராகியிருக்கிறேன் என்றால் இல்லை. தொழிற்தாவா சட்டம் பிரிவவு 2(A) ன் கீழ் தான் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். மாறாக இந்த கணக்கிட்டு மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய பணிநீக்கத்தை எதிர்த்து நான் எந்த நீதிமன்றத்திலும் எவ்வித உத்தரவையும் பெறவில்லை என்றால் சரி. 09.04.2013 ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் நான் பணி நீக்கம் செய்யப்பட்டதால் எனக்கு 12 (3) ஊதிய ஒப்பந்தம் எதுவும் பொருந்தாது என்றால் சரியல்ல. என்னை எதிர்மனுதாரர் நிர்வாகம் பணிநீக்கம் செய்த போது பொதுவான தாவா நீதிமன்றத்திலோ அல்லது தொழிலாளர் தீர்ப்பாயத்திலேயோ நிலுவையில் இருந்ததது என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்ல செய்யவில்லை என்றால் சரி. எனக்கு சட்டப்படியான ஒரு மாதம் அறிவிப்பு சம்பளம் நிர்வாகம் அனுப்பியுள்ளது அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரி. என்னுடைய பணி நீக்கத்தை எதிர்த்து தொழிற்தாவா வழக்கு எதுவும் தொடராமல் மேற்படி நிர்வாகம் வழங்கிய பணிநீக்க உத்ரவு நாளது தேதி வரை நிலுவையில் உள்ள நிலையில் இந்த கணக்கிட்டு மனுவை தாக்கல் செய்து பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை - இல்லை</u>

Sd/-S.Sumathy,
Presiding Officer,
Labour Court, Salem.